★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 8உ திங்கள் (23—7—56) ★ ★ வெளியீடு: ஆடி 9உ செவ்வாய் (24—7—56) [இதழ் 33

'ஆலைகள் உற்பத்தி செய்யாத துணிகளை கைத்தறிகள் உற்பத்தி செய்ய வேண்டும்'

மேற்கு ஜெர்மன் நிபுணர் சிபாரிசு

புதுடில்லி, ஜூலை 20—

"ஆலைகள் மிக மலிவாக உற்பத்தி செய்கிற சாதாரண துணிகளையே கைத்தறிகளும் உற்பத்தி செய்து போட்டியிடக்கூடாது; ஆலைகள் உற்பத்தி செய்ய முடியாத தனி ரகத் துணிகளை கைத்தறிகள் உற்பத்தி செய்ய வேண்டும்" என்று மேற்கு ஜெர்மன் தொழில் நிபுணர் ஒருவர் டெல்லி சர்க்காருக்குச் சிபாரிசு செய்திருக்கிறார் எனத் தெரியவருகிறது. (4-ம் பக்கம் பார்க்க)

'குழம்பிய கொள்கை'க்கு இணங்கிய நடைமுறை?

பாட்டாளிகளுக்கு எதிராக கம்யூனிஸ்டு — நிலப்பிரபு கூட்டுறவு?

ஆந்திர கிராம பஞ்சாயத்து தேர்தலில் மண்ணைக் கவ்வினர்!

நெல்லூர், ஜூலை 20—

தங்களைக் காப்பாற்றிக்கொள்ளவும், தங்களுக்குப் பிடிக்காதவர்களை ஒழிக்கவும், எத்தகைய பிற்போக்குவாதிகளுடனும் கைகோர்த்துக்கொள்ளத் தயங்காத 'முற்போக்குவாதி'கள் இந்த நாட்டு கம்யூனிஸ்டுகள்—என்பதை, இந்த மாவட்டத்தில் நடைபெற்ற சம்பவம் ஒன்று எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது என்று தெரியவருகிறது

நெசவாளர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், சிறு விவசாயிகள், மற்றும் சிலர் அடங்கிய மத்தியதர வகுப்புக் கோஷ்டி ஒன்றை, கிராமப் பஞ்சாயத்து போர்டு தேர்தலில் முறியடிக்க விரும்பினராம் கம்யூனிஸ்டுகள்! ஏனெனில், இந்த கோஷ்டிக்கு கம்யூனிஸ்டுகள் என்றால், வேப்பங்காயாம்!

பிரபல ஆந்திர கம்யூனிஸ்டு தலைவரான பி. சுந்தரைய்யா பிறந்த கிராமம் அலங்கனிபாத் என்பது; அது, கோவூர் தாலுகாவில் உள்ளது; அந்த ஊர் பஞ்சாயத்து சபைக்குத்தான் தேர்தல்!

அதில், மேற்சொன்னகோஷ்டியைத் தோற்கடிக்கக், கம்யூனிஸ்டுகள் எவருடன் அணி சேர்ந்தனர் என்றால், அவர்கள் யாரை தங்களுடைய 'பரம வைரிகள்' என்று கூறுகின்றனரோ, அந்த நிலப்பிரபுக்களுடன்தான்!

கம்யூனிஸ்டுகள் நிலப் பிரபுக்களுடன் கூட்டுச்சேர்ந்து, உள்ளூரில் உள்ள விவசாய—நெசவாளத் தோழர்களை தேர்தலில் முறியடிக்க முற்பட்ட விந்தையை என்னென்பது?—என்பதே ஊராருக்குப் புரியவில்லையாம்!

இந்தக் கூட்டுறவுகூட, அவர்களின் நோக்கத்தை ஈடேற்றவில்லையாம்! பாவம்! பஞ்சாயத்திற்குள்ள ஏழு இடங்களில் ஐந்தினை, கம்யூனிஸ்டுகள் முறியடிக்க நினைத்த 'கோஷ்டி' கைப்பற்றிவிட்டதாம்!

தலைவரும், துணைத் தலைவரும் இந்த வெற்றிபெற்ற கோஷ்டியிலிருந்தே தேர்ந்தெடுக்கப் பட்டனராம்!

தோழர் கே. வி. கே. சாமி

எதிரிகளால் எதிர்பாராத விதமாகத் தாக்கப்பட்டுக்காயங்கள் ஏற்ற தூத்துக்குடி தோழர் கே. வி.கே.சாமி அவர்கள், காயங்கள் ஆறப்பெற்று உடல் நலமுற்று வருகிறார். வழக்கம்போல் ஊக்கத்துடன் கழக நடவடிக்கைகளையும், தொழிற் சங்க நடவடிக்கைகளையும் கவனித்து வருகிறார். (ந. கி.)

வளரும் வடக்கில்!

ரூ. 6-கோடி முதலீட்டில் சைக்கிள் தொழிற்சாலை

பாட்னா, ஜூலை 21—

பாட்னாவில் பெரிய சைக்கிள் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறதாம்!

இதற்கு ரூ. 6 கோடி முதலீடு செய்யப்படுமாம்!

ஆண்டுதோறும் ஒரு இலட்சம் சைக்கிள்கள் உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்சாலையாக அது இருக்குமாம்!

ஆட்டோரிக்ஷாக்களும் அதில் உற்பத்தி செய்யப்படுமாம்!

இத்தொழிற்சாலை தனியார் துறையிலிருந்தாலும் சர்க்காரின் உதவியும் கிடைக்குமாம்!

சுதந்திரம் பெற்ற ஆப்பிரிக்க நாடுகள்

ஐ. நா.-வில் இடம் பெறுகின்றன

ஐ. நா. (நியூயார்க்) ஜூலை 20—

அண்மையில் விடுதலை பெற்ற மொராக்கோ, ஐ. நா. சபையில் இடம் பெறவேண்டும் என, ஐ. நா. பாதுகாப்புச் சபை சிபாரிசு செய்திருக்கிறது.

பிரெஞ்சுப் பிடியிலிருந்த இந்த வட ஆப்பிரிக்க நாடு, ஐ. நா பொதுச்சபைக் கூட்டம் நவம்பர் திங்களில் கூடும்போது அதன் பரிசிலனைக்கும், இறுதி முடிவுக்கும் எடுத்துக்கொள்ளப்படும்.

ரஷ்யா உள்ளிட்ட 11 நாடுகள், பாதுகாப்புச் சபையில் ஒரே மனதாக மொராக்கோவிற்கு இடம் வேண்டுமெனச் சிபாரிசு செய்திருப்பதால், ஐ. நா. பொதுச சபையின் அங்கீகாரம் நிச்சயம் உண்டு என்று கூறப்படுகிறது.

மற்றொரு ஆப்பிரிக்க நாடான சூடானும் ஐ நா.-வில் இடம் பெறுவது நிச்சயம்தான் என்று தெரியவருகிறது.

இவை இரண்டும் சேர்ந்தால், ஐ நா.-வில் உள்ள நாடுகளின் எண்ணிக்கை 78 ஆக உயரும்.

ஆப்பிரிக்காவில் மற்றுமொரு சுதந்திரம் பெற்ற நாடான டுனீஷியாவும் மனுச் செய்துகொண்டிருக்கிறது; இந்த மனு பாதுகாப்புச் சபையின் சீரிய பரிசிலனையிலிருப்பதாகவும், சீக்கிரமே டுனீஷியாவும் ஐ நா.-வில் இடம் பெற்றுவிட முடியும் என்றும் பார்வையாளர்கள் கருத்தறிவித்திருக்கின்றனர்.

மகா பஞ்சாப் சமிதி

ஊர்வலம் தாக்கப்பட்டதாம்

ஜலர்தர், ஜூலை 22—

மகாபஞ்சாப் சமிதியினர் மேற்கொண்ட ஊர்வலம் ஒன்று, யாரோ சிலரால், கல் சோடாபுட்டி முதலியனவற்றால் தாக்கப்பட்டதாகவும், அதன் விளைவாக ஒரு போலீசார் உட்பட பலர் காயம் பட்டதாகவும் கூறப்படுகிறது.

கடந்த வாரம், உண்ணாவிரதத்தைக் கைவிட்ட பாரதீய ஜன சங்கப் பொதுச்செயலாளரான ஜகிமல் தாத்தா என்பாரை ஊர்வலமாக அழைத்து வந்தனராம், சமிதியினர்!

இந்த சமிதியினரும்—சீக்கியரும், இந்நகரின் ஒரு புறத்தில் எதிரும்—புதிருமாக நின்றுகொண்டு கோஷங்கள் எழுப்பிக்கொண்டிருந்தனர் என்றும், இந்தக் கூட்டத்தைக் கலைக்க போலீசார் மூன்று முறை கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்ததாகவும் கூறப்படுகிறது.

ஆட்சியாளர்கள் உணர வேண்டுமே!

அலகாபாத், ஜூலை 22—

"மாணவர்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வண்ணம் விஞ்ஞானப் பாடங்களைத் தாய் மொழியிலேயே கற்பிக்க வேண்டும்"

என்று, விசுவபாரதி பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரும், சிறந்த பௌதீகப் பேராசிரியருமான திரு. என். போஸ் கூறியுள்ளார்.

"இலக்கியத்தையும், விஞ்ஞானத்தையும் நன்கு அறிவதற்கு ஆங்கிலம் மிகவும் அவசியம்; விஞ்ஞானத்தில் ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துவதால் ஒரு தீங்கும் ஏற்பட்டுவிடாது. முற்காலத்திலும் கூட, தொழில் நுணுக்கப் பாடங்களில் அயல்நாட்டுச் சொற்கள் இந்திய மொழிகளில் பயன்படுத்தப்பட்டு வந்தன," என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுதந்திரம் பெற்ற பின்னர்!

'மலேயாவில் பிரிட்டிஷ் துருப்புகள் தேவை இல்லை'

முதன் மந்திரி தெங்கு அப்துல் ரகிமான் நம்பிக்கை

கோலாலம்பூர், ஜூலை 22—

இன்னும் ஓராண்டுக்குள் கம்யூனிஸ்டுகளின் 'கலகம்' முழுவதுமாக முடிந்துவிடும் என்று தான் நம்புவதாக முதன் மந்திரி தெங்கு அப்துல் ரெஹ்மான் தெரிவித்திருக்கிறார்.

"சுதந்திரம் பெற்ற பின்பும் 'நெருக்கடி நிலை' நீடிக்குமானால், காடுகளில் உள்ள கம்யூனிஸ்டுகளுடன் போராடுகிற வேலையை தேசிய சர்க்காரே மேற்கொள்ள வேண்டி வரும் என்று நான் நம்புகிறேன்; இன்னும் 12 மாதங்களுக்குள் மலேயா கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகள் முழுவதுமாக ஒழிந்துவிடும் — அல்லது அவை, பிரிட்டிஷ் துருப்புகளின் உதவியை நாடாமலேயே தேசிய சர்க்காரினாலேயே சமாளித்துக் கொள்ளத்தக்க அளவு குறைந்து விடும்" என்றார், அவர்.

"சுதந்திரத்திற்குப் பிறகு மலேயா, பிரிட்டிஷ் துருப்புகளின் பாதுகாப்பில் இருக்கும் என்ற சந்தேகம் எவருக்கும் தேவை இல்லை" என்றும் அவர் கூறினாராம்.

கொழும்பு, ஜூலை 12—

கூட்டம் கூட்டமாக பிச்சைக்காரர்களை வைத்துக்கொண்டு இலாபகரமான 'தொழில்' நடத்துகிற 'காண்ட்ராக்டர்'கள் இங்கு ஏராளமாக இருக்கின்றனராம்!

புனாவில் ஏற்படுத்தப்பட்டுள்ள லோகமான்ய திலகர் 100-வது ஆண்டுவிழா நிதிக்கு குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் ரூ. 1,000 வழங்கியுள்ளார்.

தென்னாப்பிரிக்க இந்தியரிடை வேலையில்லாத் திண்டாட்டம்

சேர்ந்துள்ள தொகையிலிருந்து மானியம் வழ[illegible]க்கார் மறுப்பு

டர்பன், ஜூலை 22—

நேட்டாலில், இந்தியத் தொழிலாளரிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவதாகத் தெரியவருகிறது.

டர்பனில் மட்டும் சுமார் 7,000 முதல் 10,000 இந்தியர்கள்வரை வேலையின்றி அவதியுறுவதாகத் தெரியவருகிறது.

வேலையின்றி இருப்பதற்காக மானியம் கோரும் இந்தியத் தொழிலாளர்கள், வேலையில்லாதோர் இன்ஷ்யூரன்ஸ் நிதியினரால் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்யுமாறு கோரப்படுகின்றனர் என்றும், வேலை செய்ய மறுத்தால் சலுகை கிடைக்காது என்றும் கூறப்படுவதாகவும் தெரியவருகிறது.

19 வயதான சுப்பிரமணி என்ற ஒரு தொழிலாளி வேலை இழந்ததும், ஒரு கரும்புத் தோட்டத்தில் வேலை செய்யுமாறு கோரப்பட்டதாகவும், அங்கு 4 பவுன் மட்டுமே மாதம ஒன்றுக்குச் சம்பளம் என்பதால், அவன் வேலை செய்ய மறுத்து விட்டதாகவும், அதனால், வேலையில்லாதிருக்கும் போது தரப்படும் மானியம் அவனுக்கு மறுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

"எங்கே வேலை செய்யவேண்டும் என்று கட்டளையிடப்படுவதற்கு நாங்கள் ஒன்றும் அடிமைகளல்ல; வேலையில்லாத காலத்திற்குரிய சம்பளம் பெறுவதற்கென எங்களுக்கு உரிமை இருக்கிறது; ஏனெனில், அந்தச் சம்பளத்தில் ஒரு பகுதி, நாங்கள் வேலை செய்துகொண்டிருந்தபோது எங்களிடமிருந்து பெறப்பட்டதாகும்," என்றும் அந்த சுப்பிரமணி என்ற தொழிலாளி கூறியிருக்கிறான்.

தென்னாப்பிரிக்கத் தொழிற் சங்கக் காங்கிரஸ், இது குறித்த சர்க்காரின் போக்கைக் கண்டித்திருக்கிறது.

சுமார் 6 கோடியே 50 இலட்சம் பவுன்வரையில் வேலையில்லாதோர் இன்ஷ்யூரன்ஸ் நிதியில் சேர்ந்திருந்தும், சர்க்கார் வேலையில்லாதோர் மானியம் கோரும்போது தர மறுப்பது கண்டனத்திற்குரியது என்று கருத்தறிவித்திருக்கிறது.

கேள்விகளுக்கு விடையிறுக்க!

விவரங்களை அமைச்சர்கள் சேகரிக்கவேண்டும்'

"திரு-கொச்சியில், சட்டசபை இல்லை என்பதால் அந்த மாநிலம் பற்றிய கேள்விகளுக்கு விடையிறுப்பதற்காக, முடிந்தவரையில் விவரங்கள் அனைத்தையும் மத்திய மந்திரிகள் சேகரிக்கவேண்டும்" என்று, மக்கள் சபையில், சபைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார் கூறியிருக்கிறாராம்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ்

சென்னை 23—7—'56 திங்கள்

விஷப் பரீட்சை!

★

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் பலனாக தேச வருமானம் அதிகரித்திருக்கிறது. அதனைத் தொடர்ந்து, இரண்டாம் திட்ட காலத்திலும் மேலும் தேச வருமானம் கணிசமான அளவு அதிகரிக்க வாய்ப்புகள் இருக்கின்றன. மக்களின் வாழ்க்கைத்தரம் உயருவது நிச்சயம். வாழ்க்கைத்தரம் உயரும்போது, துணித் தேவை அதிகரிக்கும்; அப்படி அதிகரிக்கக்கூடிய துணித் தேவையைச் சரிக்கட்டத்தான் விசைத் தறிகளைப் புகுத்தி, துணி உற்பத்தி செய்யப்போகிறோம்,"

என்று, டில்லி சர்க்கார், தங்கள் புதிய சவுளிக் கொள்கைக்கான—விசைத்தறிகளைப் புகுத்துவதற்கான விளக்கம் தந்திருக்கிறார்கள்.

முதல் திட்டத்தின் பயனாக தேசிய வருமானம் அதிகரித்திருக்கிறது என்ற சர்க்காரின் கூற்றுக்கு, அவர்கள் தயாரித்த புள்ளி விவரங்கள்தான் சான்று பகர முடியுமே தவிர, மக்களுடைய வாழ்க்கை சான்று பகராது.

திட்ட காலத்திற்கு முன்பிருந்ததைவிட, மக்கள், வாழ்க்கையில் கிஞ்சிற்றும் முன்னேற்றம் பெற்றுள்ளனர் என்று கூறுவதற்கு தெளிவான அறிகுறிகள் எதையும் எவராலும் காட்டமுடியாது.

குறிப்பாகத் தென்னாட்டில் [illegible]ள்ள மக்களுக்கு, அவர்களது நலிந்துபோன [illegible]திய செழுமை எதும் ஏற்பட்டுவ—வில்லை என்பது மட்டுமல்ல—அவர்களது வாழ்வுக்கு, உத்தரவாதமான பாதுகாப்புத் தரப்படவில்லை என்பது வெள்ளிடைமலை!

சர்க்கார் ஊழியர்கள், ஆசிரியர்கள், கடை கண்ணிகளில் பணிபுரியும் குமாஸ்தாக்கள், வேலையாட்கள், பெரும் ஆலைகள் முதல் சிறு அங்காடிகள் வரையில் உள்ள நிறுவனங்களில் உழைக்கும் தொழிலாளர்கள், விவசாயப் பெருமக்கள், பாட்டாளிகள் ஆகியோரின் வாழ்வில் ஓரளவேனும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று கூறத்தக்க வகையில், சர்க்கார் கூறுகிற தேசிய வருமான அதிகரிப்பு, விளைவுகளை உண்டாக்கக் கூடியதாக இருக்கவில்லை!

வேலையில்லாத் திண்டாட்டம், நாளுக்கு நாள் சமுதாயத்தை அரித்துவரும் கொடுநோயாகப் பரவி வந்திருக்கிறதேயல்லாது, குறைந்திருப்பதாகக் கூறுவதற்கும் இல்லை.

உண்மை இவ்வாறிருக்க, நொண்டியாகிப் போய்விட்ட பழங்கால இயந்திரங்கள் தயாரித்த புள்ளி விவரங்களைக் கையில் வைத்துக் கொண்டு, முக்கியமான ஒரு விவகாரத்தில் அதிவேகமான மாற்றங்களை மேற்கொள்ளுவது விவேகமானதாக இருக்காது என்றே கருதுகிறோம்.

'விசைத் தறிகளைப் புகுத்துவதினால் கைத்தறியாளர்களுடைய வாழ்வுக்கு உலைவைக்கத் திட்டமிடுகிறார்கள்' என்ற, பொறுப்புள்ளவர்களின் குற்றச்சாட்டிற்குப் பதில் அளிக்கும்போது, டில்லி மந்திரி ஒருவர், 'இப்போதுள்ள கைத்தறியாளர்கள் அனைவருக்கும் வேலை கிடைக்குமாறு பார்த்துக்கொள்ளத் தவற மாட்டோம்' என்று, 'உறுதி மொழி' வழங்கியிருக்கிறார். இந்த உறுதி மொழி காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கையை கடந்த காலத்தில் வழங்கப்பட்ட உறுதி மொழிகளின் அவல முடிவுகள் மக்களுக்கு ஊட்டுவனவாக இல்லை.

மக்கள் சபையிலும் சரி—சட்டசபையிலும் சரி, சர்க்காரின் பிரதிநிதிகளால் தரப்படுகிற ஆயிரக்கணக்கான உறுதி மொழிகள், கணநேரம் மட்டுமே மதிப்புடையனவாக இருந்திருக்கின்றன. அளிக்கப்படுகிற உறுதி மொழிகள் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்கென்றே, மக்கள்சபை பிரதிநிதிகளடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டியிருந்தது என்றால், இந்தச் சர்க்கார் வழங்கும் உறுதி மொழியை, ஒரு உயிர்ப் பிரச்சினையைப் பொறுத்து, எப்படி மக்கள் ஏற்றுக்கொள்வார்கள்?

மந்திரி உறுதி மொழி வழங்கும் அதே நேரத்தில், அகில இந்திய கைத்தறி போர்டு உறுப்பினருள் ஒருவரான [illegible] என்பார், 'சர்க்காரின் புது— [illegible] கையை அமுல் [illegible] கூடாது' என்று பலத்த கண்டனம் எழுப்பியிருப்பதுடன், 'ஒரு விசைத் தறி 20 கைத்தறிகளை ஒழித்துவிடும்; வேலையில்லாத் திண்டாட்டத்தைக் கடுமையாக்கும்' என்று எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

சின்னாளப்பட்டியைச் சேர்ந்த தோழர் ஒருவர் நமக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்று வேறொரு இடத்தில் வெளியாகியிருக்கிறது. இந்தக் கடிதத்தில் காணப்படும் கருத்துக்களும சோமப்பா போன்றாரின் எச்சரிக்கையும், சர்க்கார் தங்கள் விஷப் பரீட்சையை மேற்கொள்ளுமுன், பன்முறை சிந்திக்க வேண்டியனவாகும்.

சென்னை சர்க்கார், இந்த விவகாரத்தில் தகுந்தோர் முடிவெடுக்கவும், அவை வழி காட்டக்கூடியனவாகும்.

தஞ்சை மாவட்ட அபிவிருத்தித் திட்டம்

ரூ. 20 கோடி ஒதுக்கப்படும்?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், தஞ்சை மாவட்ட அபிவிருத்தி வேலைகளுக்காக ரூ 20 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறதாம்; இந்தச் செலவில் ரூ. 9 கோடியை, அடுத்த ஐந்தாண்டுகளில், மாநில சர்க்கார் தரக்கூடுமாம்.

'விடுதலை பெறுவதற்கான படைக்கலன்களில் சட்டமன்ற நுழைவும் ஒன்று'

'நாம் தேர்தலில் ஈடுபடுவது கண்டு காமராசர்கள் அதிர்ச்சியுறுவதேன்?'

'மக்கள் உள்ளத்தை பாஷாணமாக்க முயற்சியா?'

மு. கருணாநிதி கருத்துரை

15—7—56-ல், சென்னை—சேப்பாக்கத்தில் நடைபெற்ற மும்முனைப் போர் நினைவு நாள் கூட்டத்தில், தோழர் மு. கருணாநிதி ஆற்றிய சொற்பொழிவின் முதல் இரு பகுதிகள் ஏற்கனவே வெளிவந்துள்ளன; இறுதிப்பகுதி இங்கு தரப்படுகிறது :—

"'ஆவடியில் மாநாடு நடத்தினோம் அகில இந்தியாவிலிருந்தும்—பஞ்சாப், மராட்டியம், வங்கம், பீகார், உத்திரப் பிரதேசம் இங்கிருந்தெல்லாம் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்; அகில இந்தியாவின் பெரிய பெரிய தலைவர்கள் வந்திருந்தார்கள்; வெளிநாடுகளிலிருந்தெல்லாம் தலைவர்கள் வந்திருந்தார்கள். இவ்வளவு சிறப்பான மாநாட்டிற்கு இலட்சக்கணக்கானவர்கள் வந்திருந்தார்கள். ஆனால், இந்த தி. மு. கழக மாநாட்டிற்கு எப்படி இலட்சக்கணக்கான மக்கள் வந்தார்கள்?'—என்று, காமராசர் ஆச்சரியப்பட்டிருக்கலாம்

"நமது மாநாடு, அகில இந்திய மாநாடு அல்ல; திராவிட நாடு முழுவதிலிருந்தும்கூடப் பிரதிநிதிகள் நிரம்பப் பேர் வரவில்லைதான்; தமிழகத்திலிருந்துதான் பெரும்பாலான பிரதிநிதிகள் வந்திருந்தனர்; வெளிநாட்டிலிருந்தும் தலைவர்கள் எவரும் வந்திருக்கவில்லை; என்றாலும், பல இலட்சம் மக்கள் அந்த மாநாட்டில் கலந்துகொண்டனர் என்றால், என்ன பொருள் அதற்கு என்பதைக் காமராசர்கள் சிந்திக்க வேண்டாமா?

"'விடுதலை உணர்வு தமிழகத்தில் அரும்பிவிட்டிருக்கிறது என்பதைத்தானே நமது திருச்சி மாநாடு காட்டிற்று?

"எத்தனை நாளைக்குப் புழுக்களாகவே மக்கள் இருப்பது? புலியாக மாறமாட்டார்களா? அடிமைகளாகவே தான் இருக்கவேண்டுமா? இவர்கள் உள்ளத்தில் விடுதலைக் கனல் எழாதா என்ற நமது குரலின் விளைவுதானே, திருச்சி மாநாடு!

"நாம் திருச்சியில் 33 தீர்மானங்களை நிறைவேற்றினோம். இந்தத் தீர்மானங்களில் எல்லாம் ஒரு தீர்மானம், காமராசர்களின் உள்ளத்தைக் குடைந்திருக்கிறது.

"'தி. மு. கழகம் தேர்தலில் கலந்துகொள்ளும்—என்ற அந்தத் தீர்மானம் கண்டு காமராசர் அதிர்ச்சியுற்றிருக்கிறார்.

"'பருவமங்கையாகிவிட்ட ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் என்று கூறினால், அதில் அதிர்ச்சியடைய என்ன இருக்கிறது?

"'அந்தப் பெண்ணுக்காக ஏங்கிக் கிடந்தவர்கள் வேண்டுமானால், பெண் கிடைக்காமல் ஏமாற்றமுற்ற நிலையில், 'இலவு காத்த கிளியானோமே'—என்று வருத்தப்படலாம்.

"'பையனுக்கு பள்ளிக்கு அனுப்பும் வயது வந்துவிட்டது; ஆகவே, அவனைப் பள்ளிக்கூடம் அனுப்புகிறோம்—என்று கூறினால், அதில் அதிர்ச்சியடைய என்ன இருக்கிறது?

"'தேர்தலில் போட்டியிடுகிற தகுதியும் பக்குவமும் கழகம் பெற்றுவிட்டது; எனவே, 'தேர்தலில் போட்டியிடவிருக்கிறது கழகம்' என்றால், அதில் அதிர்ச்சியுறுவதற்கு என்ன இருக்கிறது?

'தேர்தல் வரட்டும்; இவர்களின் சாயத்தை வெளுத்து விடுகிறேன்—என்கிறாராம், காமராசர்!

"நாம் என்ன, சேலையா, வேட்டியா—சாயத்தை வெளுப்பதற்கு?

"நாம் தேர்தலில் போட்டியிடுவது என்ற முடிவை மேற்கொண்டதும், போகிற இடங்களில் எல்லாம் காமராசர், மக்களுடைய உள்ளத்தைப் பாஷாணமாக்கிவிடக்கூடிய—நம்மைப் பற்றி துவேஷப் பிரச்சாரம் செய்கிறார்.

"திருச்சி மாநாட்டிற்கு வந்தவர்களில் யாரோ சிலர், செருப்புப் போட்டுக்கொண்டு கோவிலுக்குள் சென்றார்களாம்; பேசியிருக்கிறார்—காமராசர்.

"வாதத்திற்காக இவர் கூறுவதை உண்மையென்றே வைத்துக் கொள்வோம்; அதில் என்ன தவறு? எத்தனை வெள்ளைக்காரர்கள் 'பூட்ஸ்' அணிந்துகொண்டு கோவிலுக்குள் செல்கிறார்கள்? செருப்பு தைக்கப்படுகிற தோலினாலேயே ஆன 'பெல்ட்' அணிந்துகொண்டு எத்தனை பேர் கோவிலுக்குள் செல்கிறார்கள்? செருப்பு அணிந்த கால்களால் சிவனை மிதித்து, கண்ணைப் பிடுங்கித் தந்த கண்ணப்பன், நாயனாராக ஆக்கப்பட்டிருக்கிறானே, புராணத்தில்! இப்படியிருக்க, யாரோ சிலர் கோவிலுக்குள் செருப்பு அணிந்துகொண்டு சென்றார்கள் என்று கூறி, கழகத்தைப் பழிக்க காமராசர் முற்படுவதேன்?

காமராசர் கூறுவது உண்மையானால், அப்படி, செருப்புப் போட்டுக்கொண்டு கோயிலுக்குள் சென்றவர்கள் எந்த ஊர்கழகத்தவர்? பெயர் என்ன? உறுப்பினர் எண் என்ன? இவற்றையெல்லாம் காமராசர் கூறமுடியுமா?

"காமராசர், சத்தியமூர்த்தி ஐயரை அரசியல் குருவாகக் கொண்டவர்; சத்தியமூர்த்தி ஐயர் எப்படிப்பட்டவர் தெரியுமா?

"இராமசாமி முதலியார் ஆட்சிக் காலத்தில், யாரோ சில வெள்ளை அதிகாரிகள், சிறைக்கு அனுப்பப்பட்ட பெண் ஒருவரின் தாலியை சிறை வழக்கப்படி கழற்றி விட்டார்களாம்; அதற்காக, 'தாலி அறுத்த இராமசாமி முதலியாருக்கா உங்கள் ஓட்டு? தாலி அறுத்த நீதிக்கட்சிக்கா உங்கள் ஓட்டு?'—என்று பேசியவர்தான் சத்தியமூர்த்தி ஐயர்! அவரது சீடர் என்பதற்குத் தகுந்த முறையில்தான் இப்போது காமராசர், கழகத்தைப் பழித்துப் பேச முற்பட்டிருப்பதும்!

"உதகையில் பேசிய சுப்பிரமணியம் கூறினாராம்—'தி. மு. க. ஆட்சிக்கு வந்தால், கள்ளுக்கடை திரும்ப வந்துவிடும்' — என்று! நான் கேட்கிறேன் — 'இப்போதென்ன, கள்ளுக்கடைகள் மூடியா இருக்கின்றன—நாங்கள் ஆட்சிக்கு வந்து அவற்றைத் திறப்பதற்கு?'

மதுவிலக்கு கொண்டுவரப்பட்ட நேரத்தில், கழகத்தவராகிய நாம்தான் அந்தத் திட்டத்தை முழு மனதோடு வரவேற்றோம்; அதனை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தோம்.

"இதனை மக்கள் நன்கு அறியத்தானே செய்வர்?

"இவர்கள் வரி போடாமல் ஆளுவார்களா?—என்று கேட்கிறார்களாம், சில காங்கிரசார்!

"அப்படிக் கூறுவதற்கு நாங்கள் ஒன்றும் பைத்தியக்காரர்கள் அல்ல.

"காங்கிரசார்தான், சுதந்திரத்திற்கு முன் அப்படிக் கூறிவந்தார்கள்.

"தேனும் பாலும் ஓடும், சுதந்திரம் வந்துவிட்டால்—என்று நாங்கள் பேசவில்லை; காங்கிரசார்தான் பேசினார்கள்.

"இவர்களுடைய ஆட்சியில் தேனும் பாலும் ஆறாக ஓடவில்லை; அதில் சுயராஜ்யக் கப்பலும் மிதக்கவில்லை; மாறாக, கல்லக்குடிகளிலும், தூத்துக்குடிகளிலும் இரத்த ஆறுகளை ஓடவிட்டார்கள்! அதிலே மனிதர்களைப் பிணங்களாக மிதக்கவிட்டார்கள்!

"யாரோ தேவஸ்தான இலாகா அதிகாரி தந்த கணக்கை வைத்துக் கொண்டு, 'கோயில்களில் உள்ள சொத்துக்களை மக்களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்கிறார்கள் இந்தத் தி. மு. க.-வினர்; ஆனால், கோயிலில் 15 கோடி ரூபாய் சொத்துக்கள்தான் இருக்கின்றன; இது போதுமா? இதனைக் 'கொள்ளை'யடிக்க தி மு. கழகத்தினர் கருதுகிறார்கள்'—என்று காமராசா பேசுகிறாராம்!

"காமராசர்கள் உணர வேண்டும—தி. மு. க. பாடுபடுவது கன்னக்கோல் பிடிக்க அல்ல; மாறாக, இந்த நாட்டின் செங்கோல் பிடிக்க என்பதை!

"யவனமும், சீனமும், இதர பல நாடுகளும, தமிழனின் கால் படாத இடங்களல்ல; ஒரு காலத்தில், 'கடாரம் வென்றவன் தமிழன்' என்ற பெருமைக்குரியவன்; அந்தச் சமுதாயம் இன்று வீழ்ந்துபட்டிருக்கிறது. அதற்கு விடுதலை வேண்டும் என்பதற்காகக் கழகம் பாடுபடுகிறது என்பதை காமராசர் உணர வேண்டும்.

"இந்த நோக்கத்திற்காகத்தான் கழகம் தேர்தலில் ஈடுபடுகிறதேதவிர, 150 ரூபாய் சமபளத்திற்காக அல்ல!

"விடுதலை பெறுவதற்கான பல படைக்கலன்களில், சட்டசபைக்குச் செல்வதையும் ஒன்றாகக் கழகம் கருதுகிறது; அவ்வளவே தவிர, வேறில்லை."

சேலம் பாக்சைட்

ஆராய்ச்சிக்காக அமெரிக்கா செல்கிறதாம்

சென்னை, ஜூலை 20—

சேலம் சேர்வராயன் மலையிலிருந்து சுமார் 5 டன் எடையுள்ள பாக்சைட் கனிப் பொருள்கள், தரப் பரிசோதனைக்காக அமெரிக்காவிற்கு அனுப்பப்படுமாம்.

இந்த சோதனையின் முடிவுகள் அமெரிக்க சுரங்க நிபுணர்கள் இந்திய சர்க்காருக்குத் தரவிருக்கும் திட்ட அறிக்கையில் இடம் பெறுமாம்.

சேர்வராயன் மலையில் 500 ஏகர் பரப்பிற்கு, 70 இலட்சம் டன் பாக்சைட் கிடைக்கிறது என்றும், இது 100 ஆண்டுகளுக்குப் பயன்படக்கூடியது என்றும் கணக்கிடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மலையடிவாரத்தில் அலுமினியத் தொழிற்சாலை அமைக்கப்படும். மலையிலிருந்து அடிவாரத்தில் உள்ள தொழிற்சாலைக்கு அலுமினிய கனியைக் கொண்டுபோவதற்குக் கயிற்றுப் பாதை அமைப்பது சம்பந்தமான விவரங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு 1,500 பேர் தேவைப்படுவார்கள் என்று கூறப்படுகிறது.

ஆசிரியருக்குக் கடிதம்

நெசவாளர்கள் நிலைகுலைவதா ?

ஐயா,

இந்திய சர்க்கார் 2-வது ஐந்தாண்டுத் திட்டப்படி, 35,000 விசைத்தறிகளை நாட்டிலே புகுத்துவது என்றும், அதனால் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்றும், ஐந்தாண்டுத் திட்டப்படி 170 கோடி கெசம் துணி அதிகமாக வேண்டியதாய் இருக்க, ஏற்கனவே கைத்தறியால் 150 கோடி கெசம் துணிதான் உற்பத்தி செய்ய முடிகின்றதால், மேலும் கைத்தறிக்கு 100 கோடி கெசம் ஒதுக்கியுள்ளோம் என்றும், ஆக மொத்தம் 250 கோடி கெசம் ஒதுக்கி இருப்பதால் கைநெசவுத் தொழிலாளிக்கு வேலை இல்லாத் திண்டாட்டம் ஏற்படாது என்றும் சமாதானம் சொல்லுகிறார்கள். ஆனால், நெசவாளரின் சென்ற கால நிலைபற்றியும், தற்கால நிலை பற்றியும், விசைத்தறியைப் புகுத்திய பின் வருங்கால நிலை பற்றியும், நாட்டை ஆளும் அரசியல் தலைவர்கள் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அரசாங்க அறிக்கைப்படி, கைத்தறிமூலம் 150 கோடி கெசம் உற்பத்தி செய்தபோது கைநெசவுத் தொழிலாளி பிச்சை எடுப்பதும் பிள்ளைகளை விற்பதும் பசிக்கொடுமை தாங்காமல் தற்கொலை செய்து கொள்ளுவதும் தங்குவதற்குக் குடிசை இல்லாமல் நாதியற்றப் பிணம்போல் தெருவில் தூங்குவதும், இந்த நாட்டிலே உள்ள மக்கள் அத்தனை பேரும் கண்ட உண்மை.

அக்காலத்தில் நெசவாளிகள் பட்டக் கஷ்டங்களைப் பார்த்த மக்களுக்காக உழைக்கும் உண்மையான அரசியல் தலைவர்கள், 'கைநெசவுத் துணிகளை வாங்கிக் கட்டுங்கள்' என்று ஊர் ஊராய்ப் பிரச்சாரம் செய்தும், துணிகளைத் தோளிலே சுமந்து, தெருத் தெருவாக அலைந்து விற்றுப் பிரச்சாரம் செய்ததின் பலனாக, ஓரளவு கைநெசவுத் தொழிலாளியின் வாழ்க்கை நிம்மதியாக நடைபெறுகிறது. இந்நிலையில் 35,000 விசைத்தறிகளைப் புகுத்தினால், அந்த விசைத்தறிகள் மூலம் அதிகமாகத் துணி உற்பத்தி ஆகும்; அத்துணிகள் மக்கள் மத்தியில் விற்பனைக்கு வந்தால், துணியின் விலைகுறையும் அதன் காரணமாக நெசவாளிக்கு நெசவு கொடுக்கும் 'மாஸ்டர் வீவர்கள்' பொருள் நஷ்டம் அடைவார்கள்; அதன் காரணமாக நெசவாளிக்குக் கூலியைக் குறைப்பார்கள்; அதன் விளைவு, நெசவாளி வாழ்க்கையில் கஷ்டப்பட வேண்டியவனாவான் மேலும் 'மாஸ்டர் வீவர்'களிடத்தில் அதிகமாகத் துணி தேங்கினால், நெசவுத் தொழிலாளிக்கு நூல் கொடுப்பதையே நிறுத்தவேண்டிய நிலை ஏற்படும். அந்நிலை ஏற்படும்போது, கைநெசவுத் தொழிலாளிக்கு, வேலையில்லாத் திண்டாட்டமும், பிச்சை எடுக்கவேண்டிய நிலையும், தற்கொலை செய்துகொள்ள வேண்டிய நிலையும் ஏற்படும். ஆகவே தற்கால சூழ்நிலையில், விசைத் தறியைப் புகுத்துவது, கைநெசவாளி வர்க்கத்தையே ஒழித்துக் கட்டக் கங்கணம் கட்டுவதாகும்.

நாட்டில் விசைத் தறியைக் கட்டாயம் புகுத்துவதாய் இருந்தால் கை நெசவுத் தொழிலில் தற்சமயம் ஈடுபட்டுள்ள நெசவாளிக்கு அரசாங்கம் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்.

(1) கைத்தறி நெசவாளிகள் உள்ள ஊர்களில் கைத்தறித் துணிகளை அரசாங்கத்தார் நியாய விலைக்குக் கொள்முதல் செய்ய வேண்டும் ;

(2) தற்சமயம் கைநெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளிகளையும், தறிகளையும் அரசாங்கத்தார் பதிவு செய்து கொள்ளவேண்டும் ;

(3) இனிமேல் புதிதாகக் கைநெசவுத் தொழிலில் ஈடுபடுவதை அரசாங்கம் தடைசெய்ய வேண்டும்.

மேலே உள்ள இம்மூன்று கருத்துக்களையும் அரசாங்கத்தார் நடைமுறைக்குக் கொண்டு வந்தால் 3 - இலட்சம் விசைத் தறிகளைப் புகுத்தினாலும், தற்சமயம் உள்ள கைநெசவு தொழிலாளிக்கு வேலையில்லாத் திண்டாட்டம் வராது என்று நினைக்கிறேன்.

ஏ. எம். டி. நாச்சியப்பன்
சின்னாளப்பட்டி.

தணிக்கைக் குழு அம்பலப்படுத்தும் ஊழல்கள்

'காங்கிரசாரின் நிர்வாகத்திறக் குறைவைக் காட்டவில்லையா?'

மக்களின் வியர்வையில் விருந்து நடத்துகிறார்களே !

சென்னைக் கூட்டத்தில் கருணாநிதி முழக்கம்

"அண்ணல் காந்தியாரின் அத்தியந்த சீடகோடிகள் என்று தங்களை சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ் 'கர்மவீரர்'கள், இந்த ஏழாண்டு ஆட்சிக் காலத்தில் சாதித்தது என்ன? இவர்களின் ஏழாண்டு ஆட்சியே ஊழல் நிரம்பியது! வெளியில் சொல்லுவதற்கே வெட்கக்கேடான ஊழல் மயமானது! இந்தக் 'கர்மவீரர்'களின் ஆட்சியிலேயே 100 முறை துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது; 1,000 பேர் உயிரிழந்திருக்கின்றனர்.

"இவர்களுடைய ஆட்சியின் ஊழல்களை மத்திய சர்க்காரின் தணிக்கைக் குழு அப்படியே தந்திருக்கிறது—1-4-54 லிருந்து 15-7-56 வரையில் ஓராண்டுக் காலத்துக்குள் 144 முறை விருந்து வைபவங்கள் நடைபெற்றிருக்கிறது; நம்மீது 144 போடுகிறார்களே—அந்த 144 தடவைகள்தான் ஒரு வருடத்தில் விருந்துக் கேளிக்கைகள்! ஒவ்வொரு விருந்துக்கும் செலவாகும் பணம் ரூ. 65,000! ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சி, வரிப்பணத்தை வாரி இறைக்கிறார்கள்; விருந்துகள் நடத்துகிறார்கள். ஒவ்வொரு விருந்துக்கும் மதுபானங்களின் செலவு ரூ. 20,000 விருந்திலே போதை தரும் மதுபான வகைகள்; பீர், பிராந்தி, விஸ்கி, ஒயின் போன்ற உயர்ந்த மதுபானங்கள்! அவைகளுக்காகச் செலவிடப்படும் தொகை ரூ. 20,000!

"எந்தக் காந்தியார், மது ஒழிப்புக்காக அரும்பாடுபட்டாரோ அந்தக் காந்தியாரின் சீடகோடிகள் என்று தங்களை சொல்லிக் கொள்ளும் காங்கிரஸ் 'கர்மவீரர்'களின் ஆட்சியிலே தான் மதுபானவகைகள்! நாட்டிலே மதுவிலக்கு சட்டம் கொண்டுவந்து அமுல்நடத்தும் இவர்களின் விருந்திலே உயர்ந்தரக மதுபானங்கள்! அதற்காகச் செலவிடபபடும் ரூபாய் 20,000!—இது நான் சொல்லுவதல்ல—மத்திய சர்க்காரால் வெளியிடப்பட்ட 'ஆடிட் ரிபோர்ட்' புள்ளி விபரங்கள் கூறுவதாகும்.

"நமது வரிப்பணம் பாழாகும் விந்தையைப் பாருங்கள். நமது வியர்வை அங்கே விருந்தாக்கப்படுகிறது! இது மட்டுமல்ல தோழர்களே, காங்கிரசாரின் சாதனைகள்; மற்றும் பல ஊழல்களை புள்ளி விபரங்களோடு தருகிறது, கணக்குத் தணிக்கைக்குழு அறிக்கை—ஒரு அரசாங்க அதிகாரி—பெயர் குறிப்பிடப்படவில்லை—ஊழல்களுக்கு உடந்தையானவர்களின் பெயரைக் குறிப்பிடமாட்டார்கள்—தன் சொந்தப் பணத்தில் விருந்து கேளிக்கை நடத்தினர்; இதற்கான செலவில், அரசாங்கப் பணத்திலிருந்து ரூ. 1,625 கையாண்டிருக்கிறார். எல்லாம், நம்மால் தரப்படும் வரிப்பணம்தான். ஒரு வெளிநாட்டமைச்சர் இங்கு வந்தபோது அவரும், அவரைப் பாராட்டி வரவேற்ற இந்திய உத்தியோகஸ்தர்களும் விருந்து ஒன்று நடத்தினர்கள்; அந்த விருந்திலே மதுபானச் செலவு மட்டும ரூ. 9,692!

"வெளிநாட்டிலே இந்தியத் தூதுவர் தங்குவதற்காக வாடகைவீட்டை வாங்கியிருக்கிறார்கள்; வருடம் ஒன்றுக்கு அதன் வாடகைத் தொகை ரூ. 98,001 இதுவரையில் அந்த வீட்டில் யாரும் தங்கினதில்லை; வாடகை வீட்டில் வேதாளம் சேருகிறது; வெள்ளெருக்குப் பூக்கிறது; பாதாள மூலிபடருகிறது! இதுவரையில் வாடகைப் பணம் மட்டும் ரூ. 68,500 ஆகிவிட்டிருக்கிறது! இவ்வளவும் நமது வரிப்பணம்! மக்களின் பிரதிநிதிகளாக வீற்றிருப்போர்தான், ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சி, அவர்களின் வியர்வையை விருந்தாக்கி, வரிப்பணத்தை விரயமாக்குகிறார்கள்! நமது உழைப்பு, அவர்களின் உல்லாசக் கேளிக்கைகளுக்குப் பயன்படுகிறது!"

—என்று தோழர் மு கருணாநிதி அவர்கள், சென்னை 47-வது வட்ட தி. மு கழகச் சார்பில் 19-7-56 அன்று நடைபெற்ற மும்முனைப் போராட்ட நினைவுநாள் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது :—

"ஏழாண்டுக்காலத்தில் காங்கிரசார் நடத்திய ஊழல்களுக்கு அளவேயில்லை. பாரதமாதா புதல்வர்கள் பாராளும் விந்தையைப் பாருங்கள். நமது வரிப்பணம் எப்படியெப்படி எல்லாம் வீணாகிறது என்பதை எண்ணிப்பாருங்கள். இலண்டனிலே $5\frac{1}{2}$ இலட்சம் ரூபாய்க்கு ஒரு பெரிய திடலை ஏலத்தில் எடுத்தார்கள், கட்டிடம கட்டுவதற்கு; நமக்கெல்லாம் தெரியும்—'ஏலத்தில் எடுத்தால் தரகுக்காரன் தேவையில்லை' என்பது! என்றாலும், தரகுக்காரனுக்கு கொடுக்கப்பட்ட பணம் ரூ.10,800. கடைசியில் ரூ. $5\frac{1}{2}$ இலட்சத்தில் வாங்கப்பட்ட அந்தப் பெரியதிடல், 'கட்டிடம் கட்டுவதற்கு இலாயக்கில்லை' என்று முடிவு செய்து விட்டுவிடப்பட்டது. அதற்காக செலவழித்தப் பணமெல்லாம் பாழ்!

"இவர்களின் நிர்வாகத் திறமையிலேயே, தலை சிறந்த 'சாதனை' ஒன்றை செய்திருக்கிறார்கள்—அதாவது, ரூ. 1,60,000-க்கு ஒரு கப்பலை விலைக்கு வாங்கினார்கள்; பின்னர், அதைப் பழுது பார்ப்பதற்காக ரூ. 65,000 செலவழித்தார்கள்; இறுதியில், அந்தக் கப்பல் பிரயாணத்துக்குப் பயன்படாதென முடிவு செய்து பழைய சாமான் கடைக்காரனான ஒரு காயலான் கடையில் போட்டுவிட்டார்கள். இதற்காகச் செலவிடப்பட்ட பணமெல்லாம் நமது வரிப்பணம்! இந்த இலட்சணத்திலே ஊழல் நிரம்பிய ஆட்சியை நடத்தும் இவர்கள் இனியும் ஆளுவதென்றால் அவர்களின் சாதனைகள் எல்லாம் ஊழல் மயமாகவேயிருக்கும்.

"நாடாளத் திறமையற்ற—நிர்வாகத் திறமையில்லாத இவர்களின் ஊழல்களை மத்திய சர்க்கார் வெளியிட்டுள்ள 'ஆடிட் ரிபோர்ட்' அம்பலப்படுத்துகிறது. இந்த நிலைமையிலே காமராசர் நம்மைப் பார்த்துக் கேட்கிறார் — 'நாடகமாடிகள் நாடாளுவதா ?'—என்று! நாடகமாடிகள் நாடாளக்கூடாதா ? ஒரு கடைக்காரன் சட்டசபைக்குள் சென்றால் கடையையா வைப்பான் சட்டசபையில்? நாடகமாடிகள் சட்டசபைக்குள் சென்றால் சட்டசபையிலே நாடகமா ஆடுவார்கள்?

"காமராசர், கடந்த கால அரசியல் அடிச்சுவட்டையே அறியாதவர் போலிருக்கிறது. காமராசரின் அரசியல் குழு காலஞ் சென்ற சத்தியமூர்த்தி அய்யர் நாடகமாடியிருக்கிறார்; பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய 'மனோகரா' நாடகத்திலே மனோகரனாக நடித்திருக்கிறார்; ஆந்திரகேசரி பிரகாசம் நாடகத்திலே பெண் வேடம் போடுவதிலே விருப்பமுடையவராம்! காங்கிரஸ்காரர்களும்தான் நாடகமாடியிருக்கிறார்கள். அண்மையிலே சென்னை சட்டசபை விழாவிலே மாறுவேடப் போட்டி நடைபெற்றது. எதிர்க் கட்சித் தலைவர் இராமமூர்த்தி, 20-ம் நூற்றாண்டு நவநாகரீக மங்கையாக வேடம் தரித்துக்கொண்டு, வாயில் புகை பிடித்துக்கொண்டு 'ஸ்டைலாக' வந்தார்; காமராசர், தன் இரு கரங்களாலும் பெண் வேடமிட்டிருந்த இராமமூர்த்தியை கட்டி அணைத்து, 'ஐ லவ் யு — ஐ லவ் யு' (I Love You) என்றார். வேலை எதுவுமின்றி நம் வரிப் பணத்திலே வருடத்துக்கு ரூ. 10 - இலட்சம் சம்பளம் வாங்கும் கவர்னர் பிரகாசா, காசி யாத்திரை செல்லும் பிராமணர்போல் வேடமிட்டு, தலையில் தலைப் பாகை கட்டி, கையில் ஒரு தடியுடன், தடியின் நுனியில் கட்டுச் சாதங்களுடன் திகழ்ந்தார்; இப்படி,சட்டசபைக்குள்ளேயே நாடகமாடும் 'பகல் வேஷ'க்காரர்களை வைத்துக் கொண்டு காமராசர் நம்மைப் பார்த்துக் கேட்கிறார் என்றால் இதை என்ன என்பது?

"இ[illegible] -முனைப் போராட்ட நினைவு நாள் கொண்டாடுகிறோம். 1953-ம் ஆண்டு ஜூலை 15-ம் நாள் நடைபெற்ற மும்முனைப் போராட்டங்கள் முடிந்தும் முடியாமலும் இருக்கின்றன. இனியும் நாம அப்போராட்டங்களை என்னென்ன வழிவகைகள்செய்து வெற்றி பெறச் செய்யலாம் என்பதற்கான ஊக்கமும், உணர்வும் கொள்ள நினைவு நாள் கொண்டாடுகிறோம். இப்போராட்டங்களிலே, தென்னகத்திலே தீரர் பலர் தங்களின் அங்கங்களை அர்ப்பணித்தார்கள். அருமைத் தோழர்கள் அறுவர் உயிர் இழந்தனர்; ஐயாயிரம் பேர் சிறை சென்றனர்; ஆணவ ஆட்சியாளரின் துப்பாக்கிரவை லால்குடி நடராசனுடைய கழுத்தைத் துளைத்து, சதையைப் பியத்துக் கொண்டோடியது; ஆனால், அவனுடைய இலட்சியக் குரலை ஆட்சியாளரின் துப்பாக்கிக் குண்டு துளைத்துவிட முடியவில்லை; அவ்வீரன், குருதி கொட்ட அங்கேயே சாய்ந்தான்!

"சந்தனம் ஜோசப் என்ற ஆதி திராவிடத் தோழன்—18 வயது நிரமபப்பெறாதவன—தன் அன்னையிடம், 'அம்மையே! சென்று வருகிறேன! கல்லகுடி போராட்டத்தில் கலந்துகொள்ள களம் செல்கிறேன்'—என்று விடை பெற்று வந்த அந்த வீரமகன், களத்திலே வெறியர்களின் துப்பாக்கிப் பிரயோகத்தால் தனது இடது கையை இழந்தான்!

"இராசு என்ற செபாஸ்டின்—16 வயது நிரம்பாதவன்—போராட்டத்திலே போலீசார் பிரயோகித்த துப்பாக்கிக் குண்டு அவன் மறைவிடத்திலே பாய்ந்ததால் ஆண்குறியை இழந்தான்; வாழ்நாள் முழுவதும் அவனைத் துறவிக் கோலம் பூணச் செய்துவிட்டது, இந்தச் சர்க்கார்!

"இத்தகைய சோகச் சித்திரங்கள்தான் அவதிக்குட்படுத்திய காங்கிரஸ் சர்க்காரின் [illegible]களாகும்!

"[illegible] கொஞ்ச[illegible]மல்ல; நாம் செய்துள்ள பணி சாதாரணமானதல்ல; வாழ்நாள் எல்லாம் பேசிப் பேசி பணி புரிந்து, சுவாசப் பையிலே நோய் கண்டு இறந்த அழகர்சாமியைக் கொண்ட கழகம், நம் கழகம்! தாய் மொழியாம் தமிழை தாழ்த்திவிட வந்த இந்தித் திணிப்பை எதிர்த்து உயிர்நீத்த மாவீரர்கள் தாளமுத்து—நடராசன் போன்றார்களைக் கொண்ட இயக்கம், நம் இயக்கம்! சிரித்த முகத்தோடு சிறைக்குள் சென்று சவங்களாகத் திரும்பிய தோழர்கள் பலர் சார்ந்த கழகம், நம் கழகம்! தியாகத் தழும்பு ஏற்ற தோழர்கள் ஏராளம் உண்டு நம்மிடையே! ஆலையிலிருந்து திரும்பிய நேரத்தில் குண்டர்களால் அடிவயிற்றில் குத்தப்பட்டு, குடல் சரிய-குருதி கொட்ட அந்த நிலையிலேயே ஆவி நீத்த அப்துல் மஜீத்கள் நமமிடையே அநேகம்! அநேகம்! இத்தகைய மாவீரர்களைப் பெற்றுள்ள கோட்டம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்."

தொடர்ந்து தோழர் மு. கருணாநிதி அவர்கள், காங்கிரஸ் ஆட்சியாளர்களின் ஊழல்களைப் புள்ளிவிவரங்களுடன் எடுத்துக் காட்டியும், தமிழ்நாட்டிற்கு 'தமிழ்நாடு' எனப் பெயரிடாத சென்னை சர்க்காரின் போக்கையும், அமைச்சர்கள் சுப்பிரமணியம் போன்றோர் உளறுவதை விளக்கியும், கழகத்தை அடக்கி ஒடுக்கிவிட காமராசர் கனவு காண்பதைத் தெளிவுற விவரித்தும், தி. மு. கழகம் நாட்டவரிடையே செய்துள்ள மகத்தான பணியினை விளக்கியும் உணர்ச்சி மிக்க உரையாற்றினார்.

தென்னாப்பிரிக்கா இந்தியர் சிக்கல்

பேச்சுவார்த்தை நடத்த வெள்ளை சர்க்கார் மறுப்பு

புதுடில்லி, ஜூலை 20—

தென் ஆப்பிரிக்காவில் உள்ள இந்தியர்களை நடத்தும் முறைபற்றி—சிக்கல் குறித்து மேலும் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கையை, தென் ஆப்பிரிக்க சர்க்கார் மறுத்துவிட்டனர் என்று தெரியவருகிறது.

இந்தத் தகவலை, மக்கள் சபையில், பிரதமரின் மக்கள் சபை செயலாளரான சதத் அலிகான் தெரிவித்திருக்கிறார்.

தனது இந்த முயற்சியில் ஏற்பட்ட தோல்வி குறித்து, ஐ நா. பொதுச் சபையின் அடுத்த கூட்டத்தில் இந்தியா பிரஸ்தாபிக்கும் என்று தெரியவருகிறது.

'இந்த விவகாரத்தில், பாகிஸ்தான் சர்க்காரின் கொள்கை என்ன ?' என்று கேட்டபோது, அவர், 'இதில், பாகிஸ்தானும்—இந்தியாவும் ஒரே கொள்கையுடையவர்கள்' என்று பதில் அளித்திருக்கிறார்.

குந்தா நீர்விசை மின்சார திட்டம்

சென்னை, ஜூலை 21—

குந்தா நீர்விசை மின்சாரத் திட்டம் சம்பந்தமாக இயந்திரச் சாதனங்களையும், கருவிகளையும் கனடாவிலிருந்து பெறுவது சம்பந்தமாக சென்னை—கனடா சர்க்கார்களிடையே ஏற்பட வேண்டிய ஒப்பந்தத்தின் நிபந்தனைகளைக் குறிப்பிடுவதற்காக மத்திய—மாநில சர்க்கார்களுக்கிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றிருக்கிறது.

சைப்ரஸ் விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்க பிரிட்டிஷ் பாரசூட் வீரர்கள்

ஈடன் கொள்கைக்கு மக்கள் சபையில் கண்டனம்

புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளுமாறு சர்க்காருக்கு பெவான் இடித்துரை

நிகோசியா, ஜூலை 20—

சைப்ரஸ் தீவில் விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் தீவிரவாதிகளைக் கொன்று குவித்துக் கிளர்ச்சியை ஒடுக்கும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் பிரிட்டிஷ் இராணுவத்திற்கு உதவுவதற்காக மேலும் 400 பாரசூட் வீரர்கள் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றனராம்.

இதற்கிடையில், சைப்ரஸ் தீவிற்கான புதியதோர் அரசியல் சட்டம் வகுப்பதற்கென நியமிக்கப்பட்டுள்ள ராட்கிளிப் பிரபு, சைப்ரசில் உள்ள துருக்கிய சிறுபான்மையினர் வாழும் பிரதேசங்களுக்குச் சென்று சிறுபான்மையினரின் தலைவர்களைச் சந்தித்து உரையாடியதாகவும், தங்கள் உரிமைகளைக் குறித்து நிர்ணயம் செய்வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட வேண்டுமென அவர்கள் கோரியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

சைப்ரஸ் தீவில் உள்ள நகரங்களின் (நகரசபைத்) தலைவர்களடங்கிய தனிக் கூட்டம் ஒன்று, இனி, பிரிட்டிஷ் தூதுவரான ராட்கிளிப் பிரபுவைச் சந்திப்பது பயனற்றது—தேவையற்றது என்று முடிவு செய்திருப்பதாகவும் தெரியவருகிறது.

சைப்ரஸ் தீவின் சுதந்திரக் கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு பிரிட்டன் கையாண்டுவரும் கொடிய அடக்குமுறைகளையும், தீவின் சுதந்திரம் பற்றிய பிரிட்டிஷ் சர்க்காரின் கொள்கையினையும் பிரிட்டன் மக்கள் சபை கண்டிக்க மறுத்து, ஆதரித்துள்ளதாம்.

அந்தோனி ஈடன் மந்திரி சபை மீது, மக்கள் சபை, நம்பிக்கை தெரிவித்திருக்கிறதாம்.

'சைப்ரஸ் தீவில், பிரிட்டன் கையாண்டுவரும் கொள்கைகளை இந்த சபை கண்டிக்கிறது' என்று, தொழிற்கட்சியினர் கொண்டுவந்த கண்டனத் தீர்மானம் ஒன்று பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது; தீர்மானத்திற்கு ஆதரவாக 246 வாக்குகளும், எதிராக 319 வாக்குகளும் கிடைத்தனவாம்.

'சைப்ரஸ் சிக்கலுக்கு முடிவு காண்பதில் துருக்கியின் தலையீடு தான் தாமதத்தை உண்டுபண்ணுகிறது' என்ற தொழிற்கட்சியினரின் குற்றச்சாட்டினை லெனுக்ஸ் பாயிட் எ[illegible] மந்திரி மறுத்துரைத்திருக்[illegible]

"இந்த விவகாரத்தில், துருக்கி, 'வீடோ' அதிகாரம் பெற்றிருக்கிறது என்ற கேள்வியே எழவில்லை" என்றும் அவர் கூறினாராம்.

இந்தச் சிக்கலுக்கு முடிவு காண்பதில் தம்மாலான முயற்சிகள் அனைத்தையும் செய்துவிட்டோம்; தொடர்ந்து முயற்சிக்கிறோம் என்றும் அவர் கூறினாராம்.

"சைப்ரசில் அமைதி ஏற்படுத்த முடியாமலிருப்பதற்கு மற்றொரு காரணமும் உண்டு; எதிர்க்கட்சியாகவுள்ள தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்தால், அது இப்போது கடைப்பிடிக்கிற—'சைப்ரஸ் விரும்பினால் கிரேக்கத்துடன் இணைந்துவிட்டுப் போகட்டுமே' என்ற கொள்கையையே கடைப்பிடிக்கும் என்று சைப்ரஸ் மக்கள் நம்புகின்றனர்; ஆனால், தொழிற்கட்சி பதவிக்கு வந்தால் அப்படிச் செய்யும் என நான் கருதவில்லை; எனவே, சைப்ரஸ் மக்களின் அந்த நம்பிக்கை தவறானது என்று எடுத்துரைக்க வேண்டியதும் அவசியமாகிறது,' என்றும் லெனுக்ஸ் பாயிட் மக்கள் சபையில் கூறினாராம்.

எதிர்க்கட்சியில் உள்ள பெவான் சர்க்காரை வெகுவாக இந்த விவகாரத்தில் சாடியிருக்கிறார்.

'நாடு கடத்தப்பட்ட மகாரியஸ் பாதிரியார், லண்டனுக்கு அழைத்து வரப்பட்டு, அவருடன் சர்க்கார் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்' என்றும் பெவான் வற்புறுத்தினாராம்.

"சைப்ரஸ் மக்கள் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளவேண்டுமென்றால், அவர்கள், உடனடியாகப் பலாத்காரத்தைக் கைவிடவேண்டும்; ஏனெனில், அப்போது, கொள்கையே இல்லாத இந்த பிரிட்டிஷ் சர்க்காருக்கு, சாக்குக் கூறுவதற்கு எந்த நொண்டிச் சாக்கும் கிடைக்காமற் போகும். சர்க்கார் இப்போது சொல்லக்கூடியதெல்லாம், பலாத்காரத்திற்குத் தாங்கள் அடிபணிய முடியாது என்பதுதானே!

"நான் ஒரு சைப்ரஸ்காரனாக இருந்தால், பலாத்காரத்தைக் கைவிடுவேன்; ஏனெனில், அப்போதாவது முதன் முதலாகப் பிரிட்டிஷ் சர்க்கார் ஏதேனும் புத்திசாலித்தனமாகப் பேசுகிறதா என்று பார்க்க முடியும்" என்றும் பெவான் இடிமுழக்கமிட்டிருக்கிறார்.

எகிப்தின் அணைக்கட்டுத் திட்டம்

நிதி உதவ அமெரிக்கா, பிரிட்டன் மறுப்பு

லண்டன், ஜூலை 20—

எகிப்து திட்டமிட்டிருக்கிற அஸ்வான் அணைக்கட்டுத் திட்டத்திற்குப் பணம் உதவி செய்ய அமெரிக்கா மறுத்ததைத் தொடர்ந்து, பிரிட்டனும் உதவி மறுத்து விட்டதாம்.

துவக்கத்தில், இத்திட்டத்திற்கு அமெரிக்கா நிதி உதவி செய்யத் தயாராக இருப்பதாக ஆயத்தம் தெரிவித்திருந்தது.

அமெரிக்காவுடன் இது குறித்து விரிவாக கலந்து பேசியபின், நாங்களும், இப்போதைய சூழ்நிலையில் அந்தப் பெரிய திட்டத்தில், பங்கு கொள்வது சாத்தியமில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டோம்' என்று பிரிட்டிஷ் வெளிவிவகார இலாகா அதிகாரி ஒருவர் கூறினாராம்.

திட்டத்திற்கு சுமார் 130 கோடி டாலர் செலவாகும் என்றும், இதனை அமெரிக்காவும்—பிரிட்டனும் தருமானால், அவற்றைத் திரும்பத் தருவதற்கு எகிப்தின் பொருளாதார ஆற்றல் போதுமானதாக இருக்குமென்று அமெரிக்கா கருதவில்லை என்றும், இதுவே, உதவி மறுப்புக்குக் காரணம் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆனால் இதற்கு அப்பால், வேறு காரணங்களே இல்லை என்று எவரும் கூறிடவில்லை. அவை என்னகாரணங்கள் என்பதுயூகிக்கக் கூடியவைதானே!

முதலில் தரப்பட்ட உறுதிமொழியை மேற்கத்திய நாடுகள் திரும்பப்பெற்று விட்டாலும்கூட, அஸ்வான் அணையை எகிப்து மக்கள் நிர்மாணித்தே தீருவார்கள்' என்று எகிப்திய அதிகாரிகளாலும் பத்திரிகைகளாலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'எங்களுடைய திட்டங்களை மேற்கத்தியரின் இந்த முடிவால் பாதிக்கப்பட்டிருப்பது உண்மையே; எனினும், அந்த மாபெரும் அணையைக் கட்டியே முடிப்போம்' என்று, முக்கிய அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

'வள்ளுவர் வாரம் கொண்டாடுக'

சென்னைக் கூட்டத்தில் அன்பழகன் வேண்டுகோள்

21—7—56 இரவு 7 மணியளவில் சென்னை — கொருக்குப்பேட்டை, கிருஷ்ணசாமி தோட்டத் திடலில், 5-வது வட்டம் திருவள்ளுவர் முன்னணிக் கழகச் சார்பில் வள்ளுவர் வாரமும்—கழக ஆண்டு விழாவும் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தோழர் கா. அப்பாதுரை அவர்கள் தலைமை வகித்தார்.

தோழர் நாஞ்சில்-இராசரத்தினம் இயக்கப் பாடல் பாடினார்.

தலைவர் தம் முன்னுரையில் வள்ளுவரின் பெருமைகளை விளக்கியும், குறளின் நெறிப்படி மக்கள் நடக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டும், தாயகத்தில் தமிழார்வமுள்ள சர்க்கார் ஏற்பட வேண்டுமென்று கோரியும் சொற்பொழிவாற்றினார்.

அடுத்து தோழர் சுரதா அவர்கள், வள்ளுவரின் குறள் ஒவ்வொரு இல்லத்திலும் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும், திருவள்ளுவர் ஓர் பேரறிஞர் என்பதுடன் விஞ்ஞான வித்தகருமாவார் என விளக்கிப் பேசினார்.

இறுதியாக தோழர் க. அன்பழகன் அவர்கள், திருவள்ளுவரின் நன்னெறிகளைத் தெளிவாக விளக்கியும், குறளின் ஒப்பற்ற உயர்ந்த கருத்துக்களை மேனாட்டு அறிஞர்களும் வரவேற்பதை எடுத்துச் சொல்லியும், வள்ளுவர் நம் வழிகாட்டி என்றும், நமது நோய்களையெல்லாம் தீர்க்கும் ஓர் மாமருந்து என்றும், அவரின் அறத்தின் வழி நடப்பதே நமது தலையாய கடமை என்று அழகும்பட விளக்கியும், ஆண்டுதோறும் ஜூலைத் திங்கள் இறுதி வாரத்தை வள்ளுவர் வாரமாகக் கொண்டாட வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் அரியதோர் கருத்துரை வழங்கினார்!

கூட்டத் துவக்கத்தில் ஒலி பெருக்கி வேலை செய்யாததுடன், 'பிசுபிசு'வென மழையும் தூற ஆரம்பித்ததால் தோழர்கள் சுரதா, கா. அப்பாதுரை ஆகியோர் ஒலி பெருக்கியின்றியே பேசினர்.

தோழர் அன்பழகன் அவர்கள் பேசுவதற்கு இரண்டு நிமிடங்களுக்கு முன்னர்தான் மழையும் நின்று ஒலிபெருக்கியும் வேலைசெய்ய வந்தது; எனவே, இறுதியில் மக்கள் தெளிவாகக் கேட்டு கருத்து விளக்கம் பெற்றனர்.

கூட்டத்தில், தமிழ்ப் பண்பாடு, தமிழினம் ஆகியவற்றிற்கு பாடுபட்ட தந்தை ஈராஸ் பாதிரி, யார் அவர்களின் மறைவுக்கும் தென்னாட்டுப் புலவரேறு வரதநஞ்சையபிள்ளை அவர்களின் மறைவுக்கும் அனுதாபம் தெரிவித்தும் அரசாங்கத்தார் வெளியிடும் அஞ்சல் தலைகளில் திருக்குறள் சுவடி அல்லது திருவள்ளுவர் உருவம் பொறிக்கப்பட வேண்டுமென்று கோரியும், ஜூலைத் திங்கள் 24-ம் தேதியை வள்ளுவர் வாரவிழா விடுமுறை நாளாக விடுமாறு சென்னை சர்க்காரையும், இந்திய அரசினரையும் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இறுதியில் கழகச் செயலாளர் நன்றி நவின்றார். (ந. நி.)

கட்ச் மாநிலத்தில் நில நடுக்கம்!

ஏராளமான உயிர்கள் பலி?

ஆயிரம் வீடுகள் இடிந்து வீழ்ந்தனவாம்

1950-ம் ஆண்டில், அசாமின் பூகோள அமைப்பையே மாற்றி அமைத்த நில நடுக்கத்திற்குப் பிறகு, இப்போது, கட்ச் மாநிலத்தின் தலைநகரான பூஜ் நகருக்குத் தென் கிழக்கில் 16 மைல் தூரத்திலுள்ள அஞ்சார் நகரில் நில நடுக்கம் ஏற்பட்டிருக்கிறது.

அங்கு ஏற்பட்ட கடுமையான [illegible]க்கத்தின் காரணமாக 117 பே[illegible] 250 பேருக்குக் [illegible] வும், சுமார் ஆயிரம் வீடுகள் இடிந்து விழுந்துவிட்டதாகவும் செய்திகள் மூலம் தெரியவருகிறது.

மேலும் 800 பேர் கதி என்னவாயிற்றெனத் தெரியவில்லையென்றும், இடிபாடுகளின்கீழ் அவர்கள் சிக்கிக்கொண்டிருக்கலாம என்று அஞ்சப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அஞ்சார் தபால்—தந்தி கட்டிடம் இடிந்து விழுந்துவிட்டதாம். ஆகவே, நாட்டின் மற்றப் பகுதிகளுக்கும் அந்நகருக்கும் டெலிபோன்—தந்தி போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டு விட்டதாகக் கூறப்பட்டுள்ளது. அந்த நகரத்திலுள்ள 20,000 மக்களை, பூஜ் நகரத்திலிருந்து 'ரோடு' மார்க்கமாகவே அடைய முடியுமாம்; ஆனால், நில நடுக்கத்தின் காரணமாக, அம்மார்க்கம் சின்னாபின்னமடைந்து கிடக்கிறதாம்.

நிவாரண வேலைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன; வீடிழந்த பல குடும்பங்களுக்கும் உணவு—உடைகள் அளிக்கப்பட்டுவருகின்றன. மருத்துவ உதவியும், பண உதவியும் அளிக்கப்பட்டு வருகின்றன என்றெல்லாம் செய்திகள் கூறுகின்றன.

மக்கள் 'பீதி'யில் மற்றுமோர் அதிர்ச்சி!

எரிமலை குமுறும் நிலை ஏற்பட்டிருக்கிறதாம்

இரங்கூன், ஜூலை 21—

மார்தலேக்கு வடக்கே உள்ள மிங்குமலைச் சாரலில், இதற்குமுன் கண்டறியாத ஒரு எரிமலை, குமுறும் தருவாயில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

கந்தகச் சுவாலைகளுடன் புகை மண்டலம் எழும்பியதைப்பார்த்து மக்கள் கதிகலங்கி இருக்கின்றனர்.

சென்ற திங்களன்று ஏற்பட்ட பூகம்ப அதிர்ச்சியிலிருந்து அவர்கள் இன்னும் மீளாதிருக்கும் போது, இப்புதிய பயமுறுத்தல் வேறு ஏற்பட்டிருக்கிறது. இன்னும் லேசாக பூமி ஆடி வருகிறதாம்.

எரிமலைக்கு அருகிலுள்ள பிரதேசத்தில் பூமியில் பல இடங்களில் கொதிநீர் ஓடுகிறதாம்! பூகம்பம் காரணமாக ஐராவதி நதியில் ஒரு புதிய தீவு ஏற்பட்டிருக்கிறதாம்!

சொற்பயிற்சிக் கூட்டம்

25—7—56 மாலை 6-30 மணியளவில், சென்னை — ஜூனா அ. சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பக மனையில், தோழர் மு. கண்ணப்பர் தலைமையில், 'சொல்லும் - செயலும்' எனும் தலைப்பில், படிப்பகத் தோழர்களும், மற்றும் பலரும் பேசுவர்.

காங்கிரஸ் தியாகிகள் 'சத்தியாக்கிரகம்'

சென்னை, ஜூலை 22—

தங்களுடைய குறைகளை நிவர்த்தி செய்துகொள்ளுவதற்காகக் காங்கிரஸ் தியாகிகள், ஆகஸ்டு 8-ந் தேதி முதல் சட்டசபை முன்பாக 'சத்தியாக்கிரகம்' செய்ய முடிவெடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

தியாகிகள் சங்கம், அச்சடித்த அறிக்கை ஒன்றைத் தயாரித்து, சர்க்காருக்கும் அனுப்பிவைத்துள்ளதாம்.

ஆந்திர சர்க்கார், வரும் ஆகஸ்டு 15-ந் தேதிக்குள், தியாகிகளின் குறைகளை நிவர்த்திக்க வேண்டுமென உத்திரவிட்டிருப்பதையும் இந்தத் தியாகிகள் சங்கம் சுட்டிக்காட்டியிருக்கிறதாம்.

தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களே தங்களை அச்சுறுத்துவது கண்டு சர்க்கார் வியப்புற்றிருப்பதாகக் கேள்வி!

கழகக் கூட்டம்

★

திருவோத்தூர் :

தி. மு. கழகத் துவக்க விழா

25—7—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :

பி. கே. இராமசாமி

பேசுபவர் :

இரா. நெடுஞ்செழியன்

★

சத்தியமங்கலம் :

அஷ்டலட்சுமி மண்டப மைதானம்

25—7—56 இரவு 7 மணிக்கு

தலைவர் :

எஸ். கே. சுப்பிரமணியம்

பேசுவோர் :

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். அப்பாவு

அ. க. வேலவன்

★

பந்தநல்லூர் கருப்பூர் :

பெருமாள் கோயில் அருகில்

25—7—56 மாலை 5 மணிக்கு

தலைவர் :

எஸ். வகீது

பேசுவோர் :

பொ. தருமன்

ம. கோ. மணி

என். அசோகன்

கோ. சி. மணி

ஆலைகள் உற்பத்தி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிபுணர், சிறு தொழில் வளர்ச்சி குறித்து இந்திய சர்க்காருக்கு ஆலோசனைகள் கூறுவதற்காக வரவழைக்கப்பட்ட மூன்று நிபுணர்களில் ஒருவர்.

இந்த நிபுணர், 'கைத்தறிகளைப் படிப்படியாக, விசைத் தறிகளைக் கொண்டு ஒழித்துவிட வேண்டும்' என்று சிபாரிசு செய்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, நூரியாநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.